


JPL
C13208

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்புவதோ?

பொதுசனநூலகம்
10 JUN 2020
மாநகர்சபை
யாழ்ப்பாணம்

அழ. பகீரதன்

KOHA
JPL

139080

276834

276834

காலையடி மறுமலர்ச்சி மன்றம்

276834 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
04.8111

ஒப்புவதோ?
கவிதைகள்
ஆசிரியர் : அழ. பகீரதன்
பதிப்புரிமை : ஆசிரியருக்கே
முகவரி : செருக்கற்புலம், சுழிபுரம் (அஞ்சல்), இலங்கை. கைகேசி +94771041945
முதல் பதிப்பு : ஒகத்து 2019
வெளியீடு : மறுமலர்ச்சி மன்றம், காலையடி, பண்டத்தரிப்பு
தொலைபேசி : +94212051684
நூல் வடிவமைப்பு : சிவ பரதன் அட்டை வடிவமைப்பு : எஸ். ரி. அனுஜன்
அச்சாக்கம் : ஜே. எஸ். பிறிண்டேர்ஸ், சில்லாலை வீதி பண்டத்தரிப்பு
விலை : 200/=

OPPUVATHO
Poems
Author : Ala.Pahirathan
Copy Rights : Author
Address : Serukkatpulam, Chulipuram, Sri Lanka. T.P +94771041945
Pubilshed by : Marumalarchchi Mantram, Kalaiyady, Pandetheruppu
Phone : +94212051684
Layout : Siva Parathan Cover Design : S.T.Anujan
Copies : 300
Printed : J.S.Printers, Sillalai Road, Pandetheruppu.
Price : 200/=

ISPN :

பொது சன நூலகம்
10 JUN 2020
யாழ்ப்பாணம்

நன்றி
சி. சிவமோகன்
ப. சிவலதா, மயூரன் திசாயினி, துவிபன், பிரபஞ்சன்
முனைவர் வா.மு.சே. ஆண்டவர் மற்றும் தமிழ்நாட்டு நண்பர்கள்
எழில் கலை மன்றம் பெரம்பூர், சென்னை
பேராசிரியர் மறைமலை இலக்குவனார்
அருணாசுந்தரராசன்
விசு. க. விமலன் ஞாபகார்த்த தரும கருமம்
காலையடி மறுமலர்ச்சி மன்றம்
தேசிய கலை இலக்கியப் பேரவை
பனுவில்– வலி மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை
தாயகம் இதழ்
வளரி இதழ்
காற்றுவெளி மின் இதழ்
காலையடி மறுமலர்ச்சி மன்றம்–கனடா
எஸ்.ரி.அனுஜன், ஜெ. சஜித், த. பிரகலாதன்
ஜே. எஸ். பிறிண்டேர்ஸ் சில்லாலை வீதி,பண்டத்தரிப்பு
பெயர் குறிப்பிடாத பணிப்புலம் கிராமத்தை சேர்ந்த பல்நாட்டு மக்கள் அனைவருக்கும்

காலையடி மறுமலர்ச்சி மன்ற வெளியீடு 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

அழ. பகீரதன் என்ற பெயரில் எழுதிவரும் அழகரத்தினம் பகீரதன் யாழ்ப்பாண மாவட்டத்தில் பண்டத்தரிப்பு, காலையடியில் 1963இல் பிறந்தார். எழுபதுகளில் தனது 14வது வயதில் 'கலைமுத்துக்கள்' கையெழுத்துச் சஞ்சிகையை நண்பர்களுடன் உருவாக்கி எழுதத் தொடங்கினார். காலையடி மறுமலர்ச்சி மன்றம் இவரது இலக்கிய முயற்சிகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தது. 'சிறுசுகள்' கையெழுத்து இதழை நண்பர்களுடன் இணைந்து வெளியிட்டதுடன் எண்பதுகளில் இருந்து பத்திரிகைகள், சஞ்சிகைகளில் கவிதைகள் எழுதிவரும் அவர் தேசிய கலை இலக்கியப் பேரவையில் இணைந்து 'தாயகம்' ஆசிரியர் குழுவில் தொடர்ந்து பல ஆண்டுகள் பணியாற்றுவதோடு தற்போது 'வளரி' இதழில் பொறுப்பாசிரியராகவும் உள்ளார். இலங்கை வங்கி வடமாகாண ஊழியர் கலை இலக்கிய விளையாட்டு நலன்புரிச் சங்கம் வெளியிட்ட 'ஊக்கி' இதழில் இணையாசிரியராகவும் இருந்த இவரது இலக்கிய முயற்சிகளைக் கௌரவித்து வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவை (சங்கானை பிரதேச செயலகம்) இலக்கியத்திற்கான 'கலைவாரிதி' விருதினை 2017இல் வழங்கிக் கௌரவித்தது. தற்போது சுழிபுரம், செருக்கற்புலத்தில் வசித்துவரும் இவர் சென்னை மாநிலக் கல்லூரி வழியாக சென்னைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தினை தமிழியலில் 1988இல் பெற்றார். 1992இல் இலங்கை வங்கியில் எழுதுவினைஞராக இணைந்து உதவி முகாமையாளராக கடமையாற்றி 2018 இல் இருபத்தைந்து வருட சேவையை நிறைவு செய்து தனது 55 அகவை நிறைவில் ஓய்வு பெற்றார். சிவ பரதன் எனும் பெயருக்குள் மறைந்துநின்று நூல் வடிவமைப்பாளராகவும் இலங்குகிறார்

ஏலவே வெளிவந்த கவிதைத் தொகுப்புகள் :

அப்படியே இரு (1997)

இப்படியும் (2012)

எப்படியெனிலும் (2013)

**சமர்ப்பணம்**

எந்தை

சபாபதி அழகரத்தினம் நினைவுகளுடன்

சிறிய தந்தை

குமாரவேல் விசுவலிங்கம் கந்தசாமி

அடிகளுக்கு

அழகரத்தினம் சிவகெங்கா (தாய்)

சின்னையா சிவானந்தன் (மாமா)

சின்னையா சிவனேசன் (மாமா)

சின்னையா சிவகுரு (மாமா)

வையித்திலிங்கம் சிவஞானம் (மாமா)

நடேசன் சிவயோகம் (மாமி)

நினைவுகளை மீட்டு

**சிவ பரதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

புனைவிலக்கியங்களிலேயே தாக்கவன்மை மிக்கது கவிதையாகும். பல வரிகளில், பந்திகளில் சொல்ல வேண்டிய விடயத்தை கவிதை மூலம் ஓரிரு வரிகளில் சொல்லி விடலாம். அந்த வரிகள் வாழைப்பழத்தில் ஏற்றும் ஊசி போல, மெதுவாக வாசகர் மனதினுள் இறங்கி ஆழப் பதிந்து விடும். அதனால்தான் கவிஞர்கள் எக்காலத்திலும் பேசப்படுகிறார்கள்.

இலக்கியத்தின் மூலம் சமூக மாற்றத்தைக் காண விழைகின்றவர்கள் மக்கள் இலக்கிய கர்த்தாக்கள் ஆவர். மக்களின் பாடுகளை, வலிகளை, துன்ப துயரங்களை மட்டும் அவர்கள் பாடுவதில்லை. மாறாக, அந்தத் துன்பங்களின் உள்ளீடாக மனிதர்களைப் பீடித்துள்ள தடைகளை இனங்காட்டி, புத்தெழுச்சி கொள்ள வைத்து, சமுதாய மாற்றத்துக்கும், புதிய பண்பாட்டு உருவாக்கத்துக்கும் வித்திடுவதும் அவர்களின் பணியாக உள்ளது. அவர்கள் ஒட்டுமொத்த மானிட விடுதலை பற்றிய நோக்குடன் இலக்கியத்தை அணுகுபவர்களாவர்.

அத்தகைய இலக்கியகர்த்தாகவே கவிஞர் அழ. பகீரதன். அவரது கவிதைகள் மானிட விடுதலையைக் குவிமையப்படுத்தியவை. மனிதர்களைச் சுற்றி நடைபெறும் அநியாயங்களைப் பேசுபவை. நுகர்வுக் கலாசாரத் தளைக்குள் எமது மக்களின் வாழ்க்கை தொலைந்து கொண்டிருப்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிச் சாடுபவை. 'ஒப்புவதோ' என்ற இந்தத் தொகுதியிலும் அழ. பகீரதனின் தாக்கம் மிக்க கவிதைகள் பலவுள்ளன.

> 'ஊர்ப்பேச்சுப் பேசி நாளாச்சு
> கூடிப் பேசிடத் தடையாய் தொலைக்காட்சி ஆச்சு
> கூடிடில் தொடர் நாடகம் பேச்சாச்சு
> கற்பு விலையாச்சு
> ………………..
> பட்டங்கள் பெற வழிகள் பலவாச்சு
> விருதுகள் பெற விழாக்கள் பெருகலாச்சு
> மண்டபங்கள் மிளிரலாச்சு
> மனங்கள் விரிசலாச்சு'

என்று எம் நிலையை பெரியதொரு பட்டியலில் அடக்குகிறார். நமது பண்பாடு, ஒற்றுமையான கூட்டு வாழ்வு எல்லாம் தொலைந்து போனதை இக்கவிதையூடாக அவர் வேதனையுடன் நோக்குகிறார்.

> 'சேலை கட்டி சிறுவர் இல்லம்
> காலை மாலை விளையாட்டில் இன்பம்
> விடுமுறை என்றால் வீட்டில் ஆனந்தம்
> விடுப்புப் பார்க்கச் சுற்றம் சேர்ந்திடும்'

என சிறுவர்களின் மகிழ்ச்சியான அந்தக் காலத்தை அழ. பகீரதன் பிறிதொரு கவிதையில் பாடுகிறார். ஈற்றில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காலம்! அது அந்தக் காலத்து இன்பம்!
வீட்டிலின்றோ தொல்லைக் காட்சி
வீதிக்கு வீதி இன்றோ டியூட்டறிகள்
சித்திக்குமோ சிறுவர் சேர்க்கும் இன்பம்'

என்று தனது ஆதங்கத்தை சிறுவர் நிலை நின்று வெளிப்படுத்துகிறார்.

'மாற்றம் ஒன்றே மாறாத விதியென
மார்க்சியம் தந்த பாதையில் எழுவீர்!
ஆற்றல் மிக்க கரங்களை இணைப்பீர்!
ஆக்குவீர் பொதுமைநெறி.'

என்று இன்னொரு கவிதையில் அவர் முழங்குகிறார். முழங்குவது மட்டுமல்ல அழ. பகீரதன் நிற்கும் நெறியும் அதுதான்!

அழ. பகீரதன் தொடர்ந்து சமூகப் பணியிலும், கலை, இலக்கியச் செயற்பாடுகளிலும் தம்மை ஈடுபடுத்தி வருபவர். எமது காலையடி மறுமலர்ச்சி மன்ற செயற்பாடுகளிலும், தேசிய கலை இலக்கியப் பேரவைச் செயற்பாடுகளிலும் முக்கிய தூணாக அவர் விளங்குகிறார். 'தாயகம்' ஆசிரியர் குழுவிலும் தொடர்ந்து செயற்பட்டு, காத்திரமாகப் பங்களித்து வருபவர்.

கவிதைத் துறையில் தொடர்ந்து ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் இவர் தாயகம் உள்ளிட்ட சஞ்சிகைகளில் பல கவிதைகளை எழுதியுள்ளார். 1997 ஆம் ஆண்டில் தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடாக இவரது 'அப்படியே இரு' கவிதைத் தொகுதி வெளிவந்தது. அதில் 17 கவிதைகள் இடம்பெற்றிருந்தன. அதனைத் தொடர்ந்து 2012ஆம் ஆண்டில் தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடாக 37 கவிதைகள் கொண்ட 'இப்படியும்' கவிதைத் தொகுதி வெளிவந்தது. 2013இல் 'எப்படியெனிலும்' எனும் கவிதைத் தொகுதியும் 24 கவிதைகளுடன் வெளிவந்தது. 'ஒப்புவதோ?' இவரது நான்காவது கவிதைத் தொகுப்பாகும். அருமையான 40 கவிதைகளைக் கொண்டதாக இந்நூல் வெளிவருகின்றது. இதனை வெளியிடுவதில் காலையடி மறுமலர்ச்சி மன்றம் மெய்யான பெருமையுறுகிறது. எமது பிரதேசத்தின் ஆற்றல் மிக்க கவிஞனாக அவரை இத்தொகுதி அடையாளம் காட்டும் என நம்புகிறேன். தொடர்ந்து கலை இலக்கிய பணியாற்றி சமூக நலனுக்காக உழைக்க எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சு. சுந்தரசிவம்**
தலைவர், காலையடி மறுமலர்ச்சி மன்றம்
வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்

பொதுசன நூலகம்
10 JUN 2020
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தமிழ்க் கவிதை வரலாற்றில் ஈழக்கவிதைக்கு தனித்த வரலாறு உண்டு. ஈழத்து பூதந்தேவனார் முதல் இன்றைய சமகால கவிஞர் என் இனிய நண்பர் அழ. பகீரதன் வரை சிறப்புக்குரியோரின் வரலாறு தொடர்ந்து கொண்டே உள்ளது. தொடர்ந்து ஈழத்தில் நடந்தேறிய பயங்கர கொடூர சம்பவங்களின் ஊடே தன் எண்ணங்களை கவிதையாகச் செதுக்கி உயிர்ப்புடன் தருகின்ற கவிஞராக அழ. பகீரதன் எனக்குத் தெரிகிறார்.

'சிறுமுயல்வில்' என்கிற முதற் கவிதையிலேயே

விரியும் உலகில் தெரியும் பிரிவினைகள்
எரியும் பிரச்சனையாய் எங்கும் சூழலியல்
எவர் நலனில் எவர் அக்கறை...

.......................................................................................

ஒருசிறு முயல்வில் நடை பயில்வேனோ

கொடூரமான போர்ச்சூழலில் தொலைந்துவிட்ட மனிதநேயம், சூழலியல், உறவுகள் இத்தனையும் உள்வாங்கி இனி ஒரு நல்ல காலம் பிறக்காதா என கவிதை வழியே ஒரு வேள்வி செய்கிறார் கவிஞர்.

'ஆச்சு' என்ற கவிதையில்

பெற்ற பிள்ளைகளோ
நாம் பட்ட துன்பம் துயரம்
அறியா நிலையாச்சு
போர்ச்சுவடற்ற
அபிவிருத்தியில் நகராச்சு

என இன்றைய ஈழத்தின் களநிலைமையை எடுத்துக் காட்டுகிறார்.

'புழுங்கிப் போவதுவோ?' என்ற கவிதையில் வாழ்வின் அர்த்தங்களை தம் அழகு தமிழால் அழைக்கிறார் பகீரதன்.

கூடினர் முயங்கினர், ஊடினர் தேடினர்
பாடினர் பரவினர், நாடினர், நாட்டினர்

இந்தக் கவிதையில் கம்பன் நடையும் கார்ல் மார்க்ஸ் சிந்தனையும் கைகுலுக்கும். ஈழத்தின் முன்னணிக் கவிஞராக என் நண்பர் வலம் வருவதைக் கண்டு பேருவகை அடைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தெரிவீரே' என்ற கவிதையில்,

நேற்றைய வாழ்வின் நேயங்கள் அறிவீரே
சொந்தமும் பந்தமும் கூடலும் தெரிவீரே

எனத் தத்துவப் பார்வையுடன் கவிதையை முன் வைக்கிறார்.

போர்த் துன்பம் தாங்கா பிள்ளைகள் புலம்பெயர்ந்திடப்
பேருரைக்க பேரன்மார்
பேந்துமேன் எமக்கு வாழ்வென
எண்ணியோ எண்ணாமலோ
உறவான கணவன் இடைவயதில்
குடியும் கும்மாளமுமாய் வாழ்ந்து
விடை கொடுப்பு
முதுமையின் தனிமையில்
நாட்களை ஓட்டுவதே
வினையாக வாழ்வானேன்

என ஏக்கப் பெருமூச்சுவிடும் கவிஞர் தன்னம்பிக்கையுடன் தன் தமிழ்க் கவிதைப் பயணத்தைத் தொடர வேண்டும் என்பதே எங்கள் அவா.

க, கைலாசபதி, கா. சிவத்தம்பி, ஆ. சண்முகதாஸ், சி மௌனகுரு, எம். ஏ. நுஃமான், இ. முருகையன் என அறிவுலகப் பாரம்பரியத்தை உள்வாங்கி வீறு நடைபோட வேண்டும் என விரும்புகிறேன்.

மரபின் ஓசை நயத்தை கைவிடாதும் நவீன கவிதையின் நயத்தை உள்வாங்கியும் இவரது கவிதைகள் அவர்தம் கருத்துக்களுக்கு புதுவீச்சுத் தரும் வகையில் அமைந்துள்ளன.

பகீரதன் கவிதைகள் சில நேரங்களில் மெல்லிய பூங்காற்றாய் இதயத்தை வருடுகின்றன. சிலநேரங்களில் எரிமலைக் குழம்புகளாய் இதயத்தைச் சுடுகின்றன. கவிஞர் இதுபோல பல படைப்புகளை இயற்றி வெற்றிபெற வாழ்த்தும்


**முனைவர் வா. மு. சே. ஆண்டவர்**

தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சிறு முயல்வில் | 09 |
| 2. | ஆச்சு | 10 |
| 3. | புழுங்கிப் போவதோ? | 12 |
| 4. | தெரிவீரே | 13 |
| 5. | தனிமைக்குள் | 14 |
| 6. | விடுமுறை என்றால்... | 16 |
| 7. | சேர்ந்திடும் | 17 |
| 8. | தெருமுனையில்... | 18 |
| 9. | விடுதல் இல்லா விருப்பு | 19 |
| 10. | இழக்கவும் கூடுவதோ? | 20 |
| 11. | ஒப்புவதோ? | 21 |
| 12. | புதியது ஏற்கும் புரிவில் | 22 |
| 13. | உன் அகத்தைத் தேடி | 23 |
| 14. | தியாகத்துக்கோர் சிறப்பு | 24 |
| 15. | வேண்டிடும் நினைவுகள் | 25 |
| 16. | உடன்பட்டமோ கடன்பட்டமோ | 26 |
| 17. | இனி | 28 |
| 18. | மீட்பரோ மனிதர் | 29 |
| 19. | கோலம் செய | 31 |
| 20. | இருக்க விடுங்கள் | 33 |
| 21. | பண்பு | 35 |
| 22. | நாம் | 36 |
| 23. | சமநீதி | 37 |
| 24. | யாருமற்றவன் என்பதனால் | 39 |
| 25. | தேறோமோ? | 40 |
| 26. | இளையோர் தேடலில் இயலுவது எதுவோ? | 42 |
| 27. | உலகை ஆளும் பரம்பரையோடு... | 44 |
| 28. | எப்படி? | 46 |
| 29. | தமிழ் இயங்கிடில் | 47 |
| 30. | உழைப்பவர் தலைமையில் | 48 |
| 31. | விடை கிடையா வினாக்களோடு | 49 |
| 32. | நிற்க அதற்குத் தக | 50 |
| 33. | கொள்வதேன்? | 54 |
| 34. | இன்பம் துய்க்க | 55 |
| 35. | யாவர்க்கும் | 56 |
| 36. | விளக்கம் புரிந்திட... | 57 |
| 37. | இலங்கையன் என | 58 |
| 38. | ஆள் மாற்றம் கோருகிறது | 59 |
| 39. | நன்றுலகு யார்க்கும் | 60 |
| 40. | ஆண்டைகளின் அடிமைகளாய் | 62 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமுயல்வில்...

எழுக எழுக என
என்முன் மொழிதல்கள்
தொழுது வாழும் பொழுதுகள்
கரைக எனக் கரைகின்றன காகங்கள்
சற்றும் சளைக்காமல் தொடர்க என
சாற்றும் குரல்கள்
பற்றுக்கொண்டு பண்ணும்
காரியங்களை விட்டுக்
கணக்கெடு மனிதர் மேன்மையென
கணப்பொழுதில் கண்முன் காட்சிகள்
விரியும் உலகில் தெரியும் பிரிவினைகள்
எரியும் பிரச்சனையாய் எங்கும் சூழலியல்
எவர் நலனில் எவர் அக்கறை
வியாபாரத் தனமாய் வில்லங்கம் பண்ண
அபிவிருத்தி கண்டு குளிர்கின்ற மனசு
அதனொடு விசமென கலந்த கலவைகள்
எதனொடு நானும் ஒன்றிக்க
உதவிடும் கரங்களுக்குள்
உயிர் பறிக்கும் நஞ்சென்றால்
பயிர் பச்சையெல்லாம் பாழ் படுமென்றால்
பாலை வனமாகும் எம் மண்ணென்றால்
குலை நடுக்கும் நிலையாச்சு
பின்னும் அமைதி வாழ்வு என
எண்ணி மகிழ்வதுவோ இக்கணங்கள்...
தெளிக எனச் சொல்லும் குரல்கள்
தேறீர் என கேட்கும் ஒலிகள்
ஆறீரோ ஆற்றீரோ என
இயம்பும் நட்பு உள்ளங்கள்
தெளிவனோ தேறுவேனோ
உயிர் பிழைப்பேனோ நாளை
உலகத்து குழந்தைகள் உயிர்த்திட
ஒரு சிறு முயல்வில்
நடை பயிலேனோ?

தாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆச்சு

பண்பாடு போயாச்சு
பகுத்துண்டு வாழ்வதும் பேச்சாச்சு
கண்டு பழகும் பழக்கம் பாழாச்சு
விரலால் நோண்டித் தேடி ஒளிர் திரையில்
முகம் பார்த்துக் கதைக்கும் காலமாச்சு
வயசோ ஐம்பதாச்சு
வருடங்கள் போயாச்சு
பெத்த பிள்ளைகளோ நாம்
பட்ட துன்பம் துயரம் அறியா நிலையாச்சு
போர்ச் சுவடற்ற அபிவிருத்தியில் நகராச்சு
வீட்டுத் திட்டத்தில் படை வீரர் நட்பாச்சு
ஊர்ப் பேச்சுப் பேசி நாளாச்சு
கூடிப் பேசிடத் தடையாய் தொலைக்காட்சி ஆச்சு
கூடிடில் தொடர்நாடகம் பேச்சாச்சு
கற்பு விலையாச்சு
விபச்சாரம் செய்வதுவே விமோசனம் என
நிற்கச் சுற்றுலா வழியாச்சு
மதுசாரம் சிறப்பாச்சு
கஞ்சா அரங்கேறியாச்சு
காசு ஆற்றல் கதையாச்சு
பதவிகள் வந்தாச்சு
பட்டங்கள் பெற வழிகள் பலவாச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருதுகள் பெற விழாக்கள் பெருகலாச்சு
மண்டபங்கள் மிளிரலாச்சு
மனங்கள் விரிசலாச்சு
தண்டவாளங்கள் தொடரலாச்சு
விலைவாசி விண் தொடலாச்சு
தொடர் மாடிகளில் பொருட்கள் குவியலாச்சு
கடன்கள் பெருகலாச்சு
நிலத்தடி நீரில் ஓயில் கலந்தாச்சு
போத்தில் நீர் பொக்கிசமாச்சு
வரட்சி நிவாரணம் வந்தாச்சு
வெள்ளம் பெருக்கெடுக்க
மண் சரிவில் மனிதர் புதையலாச்சு
நிலமற்றோர் லயன்கள் சிதையலாச்சு
மரம் விற்றோர் பணம் சேர மகிழலாச்சு
தேர்தல் வந்தாச்சு
தேரா மனிதர் ஓட்டுப்போட
கட்சிகள் மாறலாச்சு
காட்சிகள் விரியலாச்சு
பட்சிகள் கூடுவிட்டுப் பாய
கட்சிகள் தாண்டக்
கொள்கைகள் ஏனென்றாச்சு
கோடிகள் புரளலாச்சு
கொடிகள் ஏறலாச்சு
படிகள் ஏறப் பவுசு வருமெனில்
பயணம் வந்த பாதைகள் மறக்கலாச்சு
எங்கோ தொடங்கி
இங்கே முடிந்த கதையாச்சு
ஆச்சு ஆச்சு ஆச்சு எனில்
நஞ்சுண்ட மேனி
நீலமாய் மாற
நீள நாம் நிற்பதுவோ
ஆழ அகலப் பார்க்கோமோ
தோழமையில் கை கோர்த்த மகிழ்வில்
கனாக் கண்ட
பொதுமை மறப்பமோ?

தாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புழுங்கிப் போவதுவோ?

திருமணம் வாழ்வின் தொடக்கம்
இருமனம் இயற்றுடும் தவமாம்
நற்பேறு பெற்றிடவெனவே
நல்வரனாய் வரவேண்டும் என
பல்லோர் வாழ்த்த வாழவென
காத்திருந்து காத்திருந்து வந்த வரன்
சேத்திருந்த பொருளெலாம் கொட்டி
பாத்திருந்து பல்லோர் வியக்க
மணமேடை அலங்கரிப்பில் மலந்திருக்க
மாண்புடையோர் வந்து வாழ்த்திட
சேர்ந்தனர் சோடிப் பொருத்தம் வியந்திட!

கூடினர் முயங்கினர் ஊடினர் தேடினர்
பாடினர் பரவினர் நாடினர் நாட்டினர்
வாழ்வின் அர்த்தங்கள் பற்பல கண்டனர்
ஆழ்தலின் உணர்வின்றிஅன்பினில் கலந்தனர்
சூழ்ந்தவர் பார்த்தவர் வியந்திட வாழ்ந்தனர்
பேறாய் பெற்றனர் மகவினை மகிழ்வினில்
ஊறாய் வந்த ஊற்றென உவந்தனர்
சாறாய் கருதியே பற்றொடு அணைத்தனர்
மாறா அன்பொடு மலர்ந்தனர் மகிழ்ந்தனர்
உறவின் கலப்பின் உன்னதம் என்றனர்

பின்வந்த நாட்கள் பிளவுகள் ஆகின...
நாட்கள் நகர்ந்திட நற்றவம் முடிந்ததோ
ஆட்கள் பாத்திருக்க சூட்சிகள் நிகழ்ந்ததோ
கேள்விகள் பெருகப் பதில்கள் ஒழிந்ததோ
கொள்கைகள் மாள குடும்பம் குலைந்ததோ
செவிகள் செவிடாக கண்கள் குருடானதோ
பாவிகள் ஆவிகள் பெருகிட அதிர்விதுவோ
உயிரும் மெய்யும் வேறு வேறானதோ
உறவின் கலப்பு பிரிவே முடிவாவதோ
அகமும் புறமும் புறமும் அகமுமெனவோ
நியதியெனவே புழுங்கிப் போவதுவோ?

தாயகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

276834
13208CC
KOHA
JPL

## தெரிவீரே!

நேற்றைய வாழ்வின் நேயங்கள் அறிவீரோ
சொந்தமும் பந்தமும் கூடலும் தெரிவீரோ
பார்த்தவர் வியந்திட பழகியதும் உணர்வீரோ
ஆர்ப்பரிக்க மனம் இலயித்ததும் செறிவதுவோ
பூப்பதும் உளம் பூரிப்பதும் இயல்பதுவோ
காப்பதும் கருத்தில் கொள்வதும் பண்பல்லவோ
சொக்க வைப்பதுவும் அற்பம் இலவல்லவோ
ஆக்கம் நிகழ்வதும் ஆனந்தம் ஆவதல்லவோ
அணைப்பதுவும் தொடர்வதுவும் இணைப்பல்லவோ
கொடுப்பதுவும் பெறுவதும் இருப்பினில் இயலுவதே
நாடுவதுவும் நன்மைகள் நாட்டுவதுவும் குறைவதுவோ
தேடுவது பேரின்பமெனில் தனிமை தவிர்ப்பதல்லவோ
பீறுபெற வாழ்வதற்கு தேறுதல் கூடுவதல்லவோ
நேற்றைய வாழ்வின் நேயங்கள் அறிவீரே
சொந்தமும் பந்தமும் கூடலும் தெரிவீரே!

தாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமைக்குள்

ஆருக்காகப் பிறந்தேன்
ஆரோடு உறவானேன்
ஆரோ ஒருவரை மணமுடித்தேன்
ஆரையெல்லாம் பெற்றெடுத்தேன்
ஆராருக்கோ மணமுடித்து வைத்தேன்

போர் துன்பம் தாங்கா
பிள்ளைகள் புலம்பெயர்ந்திடப்
பேருரைக்க பேரன்மார்
பேந்துமேன் எமக்கு வாழ்வென
எண்ணியோ எண்ணாமலோ
உறவான கணவன் இடைவயதினில்
குடியும் கும்மாளமுமாய் வாழ்ந்து
விடைகொடுப்பு
முதுமையின் தனிமையில்
நாட்களை ஓட்டுவதே
வினையாக வாழ்வானேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்காய் உலைவைப்பு
ஒருவாய் சோறெடுத்து வைப்பதற்கே
முதுமையின் தனிமையில் வாழ்வு
செல்பேசியில் சுகம் விசாரிக்கும்
விசாலமான உறவுகள்...

தனிமைக்குள் இருட்டுக்குள்
இருப்பதுவே எனக்கு
இயலுவதாக்க
சுருங்கிய உலகினுள்
சுகவிசாரிப்பற்ற
ஒடுங்கிய ஊருள்
பாரம்பரிய வீட்டுக்குள்
பார்த்திடத் தொலைக்காட்சி
பேசிட செல்பேசி...

பார்த்துப்
பேசிடப் பழகிட
கைகொடுத்திட
வருடிட கொஞ்சி
அன்பால் அரவணைக்க
துணையோ பிள்ளையோ
குஞ்சுகளோ அற்ற
தனிமைக்குள்
முதிர் விதவையாய் நான்...!

தாயகம் ஏப்ரல்–ஜூன் 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுமுறை என்றால்...

சின்ன வயதினில் சிறுவர் விளையாட்டு
சொன்ன மொழிகளில் சொக்கிடும் மனங்கள்
அன்பைச் சொரியின்ற அன்னையின் பெருமிதம்
தென்னை மரத்தடியில் தென்றலின் அரவணைப்பு

கூடி ஓடுதலில் குடும்பத்தில் குதூகலம்
ஆடிப் பாடுதலில் அனைவர்க்கும் ஆனந்தம்
வாடி வீழ்ந்திடும் இலைகளின் நடுவினில்
தேடிப் படுத்து வானினை நோக்குதல்

பாடிய பாடலில் இசைந்திடும் மனங்கள்
கோடிகள் சுற்றி ஓட்டப் பந்தயங்கள்
சோடிகள் சேர்ந்து கூட்டத்தில் பாட்டுக்கள்
சாடிகள் நிறைய நட்டனர் கன்றுகள்

சின்னப் பானையில் சோற்றுச் சமையல்
அன்னம் இட்ட கைகளுக்குப் படையல்
நாவூற மெச்சிப் புகழும் தாய்மை
நாலு தெருவிலும் நாட்டிடும் பெருமை

சேலை கட்டிச் சிறுவர் இல்லம்
காலை மாலை விளையாட்டில் இன்பம்
விடுமுறை என்றால் வீட்டில் ஆனந்தம்
விடுப்புப் பார்க்க சுற்றம் சூழ்ந்திடும்

காலம்! அது அந்தக் காலத்து இன்பம்!
வீட்டிலின்றோ தொல்லைக் காட்சி
வீதிக்கு வீதி இன்றோ டியூட்டறிகள்
சித்திக்குமோ சிறுவர் சேர்க்கும் இன்பம்?

தாயகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்ந்திடும்

அனுதினமும் துயரெனில்
அதிகாலை அமைதியில்
அரிதினில் தெரிவாய்
அன்பினில் ஏற்றம்!

சிறுசிறு துன்பம்
தேற்றிடும் மனம்
பெறுகின்ற பேறிற்காய்
பொறுத்திடும் கணங்கள்!

குழந்தைகள் குறும்புகள்
வளர்ச்சியின் துடிப்பு
மழலைகள் மலர்வு
மனதினில் நிறைவு!

விடலைகள் சேட்டைகள்
விடுஅது இயல்பு
அடங்கிட மறுக்கின்
அனுபவம் வாய்க்கும்!

பிரச்சனை என்பதுவே
நாட்களின் தோற்றம்
கரைச்சல் என்பதுவே
காலத்தின் தோற்றம்!

மாறிடும் தோறும்
ஆறிடும் மனம்
தேறுவது ஒன்றே
கேடில்லை முயலில்!

முரண்படில் இயக்கம்
முகிழ்த்திடும் ஏற்றம்
செறிவது கூடும்
சேர்ந்திடும் நலங்கள்!

தாயகம் ஓகஸ்ட்- டிசம்பர் 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெருமுனையில்...

தெருவில் நான் பயணிக்கின்றேன்
தெரு என்னைச் சுமந்து செல்கின்றது
தெருவில் என்னை நகர்த்துகின்றது வாகனம்
நானே தெருவை நகர்த்துதல் இலையாயினும்
நான் தெருக்களை நகர்த்துவதாய் உணர்கின்றேன்
நகரும் வாகனங்களில் நபர்கள் நகர்கின்றனர்
அவரவர் முகங்களில் அவரவர் வேகம்
அவரவர் நோக்குகளில் அவரவர் மார்க்கம்
பெறுமவற்றுள் யாதொன்றும் பேறிலையாயினும்
பயணங்கள் ஏனோ பலகாலும் தொடர்கின்றன
அறுநிலை வரினும் ஆரும் உணருதலின்றி
அயற்சி இன்றி முயலுவர் பயணங்களில்..
பயனற்றன எனிலும் பயணங்களில்
மனக்குவிப்புடன் பயணிப்பதுவே இலக்காய்!
தெருக்கள் எங்கும் நானும் திரிகின்றேன்
இலக்கு எதுவென அறியாது புலம்புகின்றேன்
போகுமிடம் எங்குளதென புரியாது நகர்கின்றேன்
யாரிடம் வினவின் யார் எடுத்துரைப்பர்?
யாரும் அறிவரோ யான் போம் இடம்!
ஊடகம் ஒன்றுளது தேடகம் அதுவென
கூகுளுக்குள் குவிகின்றது என்முகம்
தெருவில் ஓரத்தில் நான் ஒதுங்கி..
தெருவில் கடப்பவர் பலர் உளர்
தெருவில் நடப்பவர் யார் உளர்
தெருவே என்னை வியப்பாய் பார்க்க
பார்ப்பார் யாருமில்லை பயணம் குறியாய்...
தெருக்கள் யாருக்காய்; யார் தெருக்களோ?
சுருங்கிய உலகுள் நானோ
குசலம் விசாரிப்பார் ஆருமற்ற தனியனாய்
கூகிளுக்குள் முகம் பதித்து தெருமுனையில்...

*தாயகம் , ஓகஸ்ட்– டிசம்பர் 2016*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதல் இல்லா விருப்பு

*நாளைய உலகு உனக்கென விரியும்*
*பொறுத்திடும் தருணங்களில் மனது மலரும்*
*நடப்பும் நிகழ்வும் உமக்கென தெரியும்*
*முதிர்வில் உனக்கென நிலமும் நெகிழும்*

*உலகுள இயற்கை உமக்கென உளதாகும்*
*உலகினுள் வேற்றுமை தெற்றன தெரிவதாகும்*
*உலகிது எல்லோர் பொதுமையென கிடந்திடும்*
*விலக்கிடில் எப்படி மனமது நிறைந்திடும்*

*விரியும் விரியும் உறவுகள் விரியும்*
*அறிவோர் தெரிவர் அகமது மலரும்*
*அரிதில் கிடைப்பது அன்பெனத் தெரியும்*
*செறிவது இணைப்பே நாடொறும் நிலைக்கும்*

*சுடரும் சுடரும் ஒளிர்வென சுடரும்*
*சுருதி அடங்கிடாது நாடொறும் விளங்கும்*
*சுதந்திர உலகில் இன்பமே நிறையும்*
*இதந்தரும் இணைப்பே இயலுவ தாகிடும்*

*நாளை உலகினில் மாற்றம் நிகழ்ந்திடும்*
*நாட்டுவர் பொதுமை நாநிலம் செழித்திடும்*
*கொடுமை இல்லாக் குவலயம் நிறைந்திடும்*
*விடுதல் இல்லா விருப்பினில் செறிவோம்!*

*தாயகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இழக்கவும் கூடுவதோ?

மாலை முழுவதும் விளையாட்டென
மாணவர் இருந்த காலமுண்டு –நாம்
மாணவராய் இருந்த காலமது
கூண்டுக் கிளி போல் பள்ளிக்குள்
கூடிப் பேசிக் களிப்பதுவோ
பிரம்பெடுத்து அடிப்பர் ஆசிரியர்
தரம் பிரித்து கற்பிக்கும் நடைமுறையில்
மனம் ஒப்பிட மறுத்து
நாடி நண்பருடன் விளையாடிட
நாட்டம் கொள்ள மாலையில்
வீட்டுக் கோடியில் இடம் தேடி
நாட்டி வைத்த இன்பம் கோடி
கெந்திப் பிடித்தலிலும் கோலி விளையாட்டிலும்
தாயம் உருட்டலிலும் சிப்பி பெறுக்கலிலும்
கொக்கான் வெட்டலிலும்
கிட்டி புள்ளு விளையாட்டிலும்
கிளித்தட்டு விளையாட்டிலும்
கெட்டித்தனம் காட்டிடும் அந்தக்
காலம் மறப்பதும் உண்டோ?
கனிவில் மனம் இலயித்ததே!
உண்டமோ உடுத்தமோ அறியோம்
கண்டது கருத்தொருமித்த விளையாட்டே!
பண்டுதொட்டு எம் பரம்பரையினர்
பழக்கிவைத்த விளையாட்டு
பாரம்பரியம் காத்த பண்பாடு...
ஆரம்ப பள்ளியில் ஆரம்பித்த சினேகம்
தேர்ந்த நட்பாய் நாடொறும் வளரும்...
நீள் புவியில் இன்றோ நீள் பிரிவில்
ஆள் காணா புலம்பெயர்வுகள் ஆனாலும்
அன்று தொட்ட கைகளை இன்றும் அவாவும்
அன்பு கொண்டு அணைக்கத் தோன்றும்...
விளையாட்டில் விளைந்த இணைப்பை
இழக்கவும் கூடுவதோ? இதயம் கனக்குமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்புவதோ?

நிலங்கள் மெழுகப்படுகின்றன
தலங்கள் செழுமைப்படுகின்றன
வீதிகள் விசாலிக்கப்படுகின்றன
விரைவுந்திகள் வலம்வருகின்றன
மண்டபங்கள் சிலிர்க்கின்றன
வாகனங்கள் செல்கின்றன
தொடருந்திகள் வருகின்றன
உடைகள் கவர்கின்றன
ஹோட்டல் உண்டிகள் உருசிக்கின்றன
பதவிகள் கிடைக்கின்றன
பெருமிதங்கள் தோன்றுகின்றன
நாடுகள் வரவேற்கின்றன
தொலைபேசிகள் கதறுகின்றன
இணையம் எல்லாம் தருகின்றன
அட்டைகள் எங்கள் வசம்
தட்டினால் போதுமாம்
தடையின்றி வருமாம் எல்லாமும்
எனிலும்
மனங்கள் விரிவதில்லை
அகம் மலர்வதில்லை
ஏழ்மையில் மாற்றமில்லை
நித்திய வாழ்வில்
சித்தமதில் சிறப்பில்லை
உழைப்போ கிடைப்பதில்லை
உணவுக்குள்ளோ நஞ்சு
அடகு வைக்கப்பட்டது
எங்களது இருப்பு!
உலகமயமாதலாய் விரிந்த
முதலாளியம் செழிக்கவோ
வந்தன வந்தன எல்லாம்
எனில்
தோழமை தொலைத்த
தாழ்வதை
ஒப்புவதோ நாம்!

தாயகம், ஜூலை- செப்டம்பர்,2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியது ஏற்கும் புரிவில்

புரிந்தவரும் இல்லை
தெரிந்தவரும் இல்லை
உணர்ந்தவரும் இல்லை
உய்த்தவரும் இல்லை

நினைப்பது ஒன்று
நடப்பது ஒன்றாய்
நிகழ்வுகள் வாட்டும்
நிதமெனில் என்செய்ய!

அறம் என நினைத்து
இழந்தது அதிகம்
திறம் என யாரும்
புரிந்ததும் இல்லை

ஐம்பது அகவையில்
நிறைவென எதுவுண்டு
அடங்க மறுக்கும்
மனதொடு நானும்.

இயற்கையின் அமைப்பில்
முதுமையின் ஏற்பு
படிமுறை வளர்ச்சியில்
அடங்குதல் முறையே

இனியொரு பிறப்பு
இயலுதல் ஆகும்
புதியது ஏற்கும்
புரிவினில் பூக்கும்

இது விதியென ஏற்கில்
முதுமையும் தகும்
இனிவரும் காலம்
இளையவர்க்கு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் அகத்தைத் தேடி...

என்ன நினைத்து எனைத் தந்தனை?
என்ன எண்ணி எனை விதைத்தனை?
உன் கருவறையில்
முளைவிட்ட எனது வளர்ச்சியில்
மூர்க்கத்தை ஏன் தந்தனை?
ஆர்க்கும் அடங்கா இயல்பினை
ஏனோ தந்தனை?
நேர் நின்று எதிர்க்கும் உணர்வை
எனக்குள் ஏனோ விதைத்தனை?
சொன்ன மொழியுள் சிந்தை விட்டே
இன்னும் இன்னும் ஏனோ
எனை எழுதத் தூண்டுறாய்!
எனை ஈன்ற என் தாயே
எனக்குள் நீயே
எனிலும்,
எங்கு எங்கு நீயென
எல்லார் முகங்களிலும்
உன் அகத்தைத் தேடி
நகர்கின்றேன்...
நாட்கள் நகர்ந்திட!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாகத்துக்கோர் சிறப்பு

*தியாகம் போற்றுதற்குரியது,*
*தியாகம் ஏற்றுதற்குரியது!*
*மயானம் ஒன்றில் உறங்குதற்குத்தானா*
*தியாகிகள் ஆயினீர்,*
*மயானம் ஒன்றேதானா உங்கள் இலக்கு?*
*வானில் ஒளியாய் ஒளிர்ந்து ஏன்*
*மண்ணில் வாழும் மனிதர்க்கு*
*மகிமைகள் செய்திட முயன்றிடீர்!*
*எண்ணில் எமக்கு இயலுவது*
*எண்ணரிய பணிகள்...*
*நீவிர்*
*ஏனோ*
*மயானத்தில் துயில்தற்காய்*
*மண்பரப்பை வேண்டுவீர்?*
*வேண்டாம்!*
*இன்னுயிரை தியாகம் செய்த*
*உங்களின் பெயரால்*
*வன்னியில் உள்ள உங்கள்*
*கனவுகளின் மாந்தர்*
*எழுந்திட வாழ்ந்திட,*
*எழுச்சியுற மாண்புற,*
*இயன்றன ஏதும் செய்திட*
*கேளும்*
*தியாகத்திற்கோர் சிறப்பு*
*அ:.தே என மொழிவீர்!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டிடும் நினைவுகள்

*வேண்டாம் என ஒதுக்கிலும்*
*மீண்டும் மீண்டும்*
*மனக்கதவைத் தட்டும்*
*நினைவுகள்...*
*கொண்டாடிக் களிக்க*
*முடியுமா இன்று?*
*நாளைய கருமத்தை*
*கருதி*
*நடு இரவில்*
*நித்திரை வேண்டியே*
*என் கண்கள் தவமிருப்பினும்*
*நினைவுகள்*
*தாண்டி என் மனமதில்*
*வேண்டுதல் செய்வது ஏன்?*
*கால ஓட்டத்தில்*
*கரைந்துபோன இளைமை போல்*
*இழந்து போவதில்லையே நினைவுகள்,*
*இன்று*
*நிலைப்பன*
*எதுவும்*
*இன்பமாய் இலையெனில்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன்பட்டமோ கடன்பட்டமோ

ஏதடா, ஏதடா இந்த உலகம் ஏதடா
ஏனினி நாங்க? ஏனினி நாங்க?
சோலையுமில்லை, ஆலையுமில்லை
காடுமில்லைக் களனியுமில்லை
பாலைவனம் ஆச்சுது நஞ்சூறிய நம் நிலம்!
நீரிற்கு காசு, சுவாசிக்கும் காற்றுக்கும் காசெனில்
ஏழையர் பணமே போகுமே போகுமே
பல்தேசிய கம்பனிப் பைகளும் நிறையுமே!

ஆண்டவன் அருளை வேண்டி வர என்றே
நாள்பல நமக்கு நாள்பல நமக்கு
அட்சய திதியும் வளை காப்பு விரதமும்
தீபாவளியும் கோயில் திருவிழாவும்
கொண்டாடிட பணம் எல்லாம் போச்சு!
பண்டம் பலவும் வேண்டிட வேண்டிட
திண்டாட்டம் பணத்திற்கு வந்ததெனில்
கடன்படு கடன்படு என காட்டினர்
உடன்படு உடன்படு என பத்திரம் கேட்டனர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு விடுதலை ஆவதற்கு வழியிலை.
பொல்லா நிலை போயகலப் பாத்திருக்க
நல்வாழ்வு வருமென நாலு திக்கும் வரவேற்க
வரி பெருக வரி பெருக வசூலாகும் வசூலாகும்
பரிவும் இல்லை பண்பும் இல்லை
தெரிவு உண்டு தேர்தல் உண்டு
தேயத்து மக்களுக்கு தேர்வதற்கு வழியுமுண்டு
ஆயத்தில் முதலாளியம் கோலூச்சும் நெறியாகும்

பல் தேசிய கம்பனிகள் நல் உற்பத்தி செய்திடுவர்
பெறுவதற்கு ஏதுமில்லை தடைகள் இங்கு
பல்கிப் பெருகிட மூலதனம் அவர்க்காகும்
பட்டினி கிடந்தேனும் நுகர்வுக்காய் நாமிழப்போம்
தவணைக் கட்டணத்தில் தரம்மிக்க பொருட்கள்
பூச்சிய வட்டியில் ஆச்சுது எமக்கிது என்று
நின்றிடுவீர் இதன் முடிவில் இருப்பு பூச்சியமாக
பயன் பெறுவர் பல்தேசிய கம்பனிகள்!

வியன் உலகத்து நிலை இதுவாய்
விந்தையிது அறியீரோ சொத்தென ஏதுமிலா
கடனாளியாய் ஆக்கியே சொந்த நிலமிழக்கவே
உடன்பட்ட நிலையறியீரோ உயிர் விடப் போவதுவோ
அட நாளை நல்லரசுக்காய் காவடி எடுத்திட
வீடு வருமோ விளைபொருளும் நமக்காகுமோ?
கடனழியுமோ கவலை தீருமோ, தீர்வாகுமோ?

தாயகம் ஓகஸ்ட்–டிசம்பர் 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி

மகளிர்
மனங்களின் மாற்றம்
நிகழ்ந்திட
நடப்புகளில் கவனம்..
புகழுக்குள்
புழுங்கிப்போகிடாது
தேடலின் தொடக்கம்..
வீழும் பாதைகளில்
தேரார் தற்கொலை எனும்
முடிவுகள்..
நாளும் தொடரும் அடக்குமுறை
கண்டு எழுவர்.
தினத்தாள்கள் தேடி அறிவை நாடிடில்
முதியவர் இன்னும்
மகளிரை வீட்டுக்குள்
அடக்கிடத் துணிவரோ
தம்
அனுபவ அறிவென
அவர்களின் அறியும்
அவாவினை அறியா
அறிவுரை நவில்வரேல்
பொறுப்பரோ மகளிர்?
இனி,
பொங்கிடும் உணர்வுடன்
போக்குகள் மாற்ற
எழுவர்! நிமிர்வர்!
தெருவழிப் பேச்சிற்கு அஞ்சார்
வருவதுணர்ந்தே
ஒன்றுபட்டு
கரங்கள் இணைத்து
அடைவர் பெண்ணின் பெருமை!

*தாயகம் 2017*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்பரோ மனிதர்

*ஈஸ்டர் தினத்தில்*
*ஈனம் நிகழ*
*குஞ்சுகள் குமர்கள்*
*பிஞ்சுகள் எஞ்சிடாது*
*சாய்க்க மாண்டனர்*
*குண்டொடு சுவர்க்கம்*
*காண்பரெனும்*
*பொய்மையில்*
*இரத்தம் தோய...*

*பழியே பாவமாய்*
*பாவமே பழியாய்*
*மதமே விசமாய்*
*மதத்துள் விசமாய்*
*மதத்தொடு விசமாய்...*

*நஞ்சாய் விதைகள்*
*விதையே நஞ்சாய்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம் பிறழ்வாய்
பிறழ்வே வேதமாய்
வாதமே பொய்க்குள்
பொய்யே வாதமாய்...

காசுக்காய் மதம்
காசொடு மதம்
காசால் மதம்...

மதமது கொள்ளல்
மாண்பில என
கருந்துளை படமாகும்
காலத்தும் கருதோமோ?
மனிதர் வேண்டுவது
மாண்போ? வீம்போ?
வாய்க்காதோ மனிதருள்
ஜீவ காருண்யம்?

மனிதர்
என்று தானோ
மனிதம் மலர
கோர்க்கும் கரங்களால்
மதங்களை மாய்ப்பர்!

மீட்பரோ மனிதர்
யேசுவையும் நபிகளையும்
புத்தரையும் இராமரையும்
மதங்களிலிருந்தும்?

வளரி வைகாசி 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலம் செய

நீள அகன்ற தெருக்களில்
சுழித்தோடும் உந்துருளிகளில்
கரைந்தோடும் இளமைகள்
கால நீட்சியில்
கோலம் காட்டிடும்
அறிவியல் மேன்மையில்
அன்பும் அறமும் தேய
நொடிப் பொழுதின் உரசலில்
முட்டி மோதிட
அகவை அடையா உயிர்கள்
பறக்கச் சடமாய் உடலங்கள்!
ஞாலம் போற்றும் நாட்டில்
கடனில் விருத்தி வாய்த்திட
காப்பெற் தரைகளில்
லீசிங் வாகனங்களின்
ஈசிப் பயணங்களில்
ஓசியாய் கிடைக்கின்ற
அனுப்பீடுகளில் களிக்கின்ற
மூன்றாம் உலகத்து குஞ்சுகள்
இரத்தம் உறைய நிலத்தினில்...
நாகதீபம் நோக்கிய
தம்பகோளம் நாடிய
பாசிக்குடா மெச்சிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுலா கேந்திரங்கள்
கோலம் செய
பாதைப் பயணங்கள்
ஊருறை மக்களின்
பொருட்டெனக் கொள்ளா
உயிர்களைக் காவுகொள்ள
கடன் பொறிக்குள் நாடும்
கடனில் மாழும் வீடும்...
சாவுக்குக் கட்டியம் கூறிடச்
சாராயத்துள்
நஞ்சுக் கலவைகள்
விஞ்சிடக் கஞ்சா அபினென...
அயல் மேவிடத் தமது
நுகர்வின் நலன்வேண்டித்
தம்மையே நுகர்வுக்காய்
கொடுத்துத்
தீய்ந்திட
இளமைகள் தாமழியச்
சூழும் சுற்றுலா மையங்கள்
நச்சுப் பொதிகளாய்...
வீழும் உடலங்களில் எங்கும்
சர்வ நாசக்
கொல் நெறியென
உலகப்பன் விட்டபடி
உலகமயமே
பயங்கர வாதமாய் மேலெழும்

தாயகம் ஏப்ரல் -ஜூலை 2019


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருக்கவிடுங்கள்

இருக்க விடுங்கள்
ஆற அமர
சம்மணங்கொட்டி இருக்கவிடுங்கள்
அன்றொரு காலமிருந்தது
சாணம் மெழுகிய தரையில்
பாய்விரிப்பில் வரவேற்று
இருத்தி
தலைவாழையிலையில்
விருந்து தந்த காலம்
தந்தையர் தலைநரையா அக் காலம்
பிள்ளைகள் மணமுடிக்க என்று
பிள்ளைகள் சாமத்தியச் சடங்கென்று
பிறந்த நாள் என்று
வீட்டில் அழையா இக்காலம்
மயிர்மை பூசி நின்று
தூர அழைத்தேகுவீர்
விரைவுந்திகளில்
ஊர் உவப்புற்று ஒன்றுகூடா
நகர் அமைந்த மண்டபங்கள் நாடி
மனம் ஒருப்பட்டு இருக்க பாயில்லை
குளிர்ந்திருக்க திண்ணையில்லை
தலைவாழையிலையில் பரிமாறும் மனமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

சம்மணம் கொட்டியிருக்க நாகரிகமில்லை
ஒருப்பட வில்லை எனக்கு
பெருமிதங்கள் கூடிய மீட்டல்களுக்காய்
விருப்புற அழையா அழைப்பிதழ்கள்...
பணியிடம் நாற்காலியில் இருந்து
வலிக்கின்ற முதுகு முள்ளந்தண்டு
நோய் நொடிமிக்க வாழ்வு
ஒருநாள் ஞாயிறு விடுமுறையிலும்
என்வீட்டு முற்றத்தில்
வேப்பமர நிழலில்
பனம் பாய்விரிப்பில்
சம்மணம் கொட்டி இருக்க விடாமல்
மயிர்மைபூசி வீடியோ வண்ணங்களொடு
இணையத்தில் வலம்வர
மண்டபங்கள் நாடிட எனை
அழைக்காதீர்
மண்புழுதியில் என்னைச்
சம்மணம் கொட்டி இருக்க விடுங்கள்.

வளரி 2018 பத்தாவது ஆண்டுச் சிறப்பிதழ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பு

ஒருவரை அவர்
ஒத்தவர் இலையென
ஒருப்பட மறுப்பதே
பண்பெனவோ?
தூய்மையே பண்பெனத்
தகுமெனில்
பழமைக்குள் வீழ்ந்து
வழமைகள் காண்பதுவோ?
கண்டிடில்
எண்ணிய வண்ணம்
எவரும் இலையென
ஏற்கா எம்நிலை
நலமென கொள்வதுவோ?
தெளிவு ஞானம்
இருந்தால்
ஒளிவு மறைவின்றி
பேசிடல் கூடும்.
நோக்கு நல்லதெனில்
போக்கு மாறிடும்.
மேன்மை மனித பண்பதுவே!
ஒத்த தன்மையில் யாரையும்
ஒப்ப எண்ணிடில்
மெத்தப் படிக்கவிலையெனிலும்
சொத்து இலையெனிலும்
வீரம் இலையெனிலும்
மேன்மை கண்டிடல் கூடும்
வித்தகம் யார்க்கும் வாய்க்கும்.
பண்புடைமை
பழமையில் உளதெனும்
பாழ் மனம் மாறும்.
பண்பு புதுமையில் மிளிரும்.
மாறிவரும் உலகின்
மாற்றங்கள் நிகழ்ந்ததெனில்
தேறியறிய தோன்றிடும்.
பண்பு இன்றிவ்வாறென
ஒப்ப எவரையும் ஏற்பமே!

*தாயகம் ஏப்ரல் 2018*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம்...

*வாள் வீச்சின் வன்மையில்*
*ஆள் பூமியின் பரப்பை*
*விரிவுபடுத்தலில்*
*வீரம் காட்டிய*
*தொல் மறவர் குடியெனப்*
*பிதற்றியே*
*வேற்றுநாட்டவரை*
*அடிமையாய் கொண்டதனையும்*
*வேற்றுநாட்டுப்*
*பெண்டிரைக் கொண்டதனையும்*
*வேற்று நாட்டு*
*வளங்களைக் கொள்ளைகொண்டதனையும்*
*பெருமையெனச் சாற்றி*
*யாவரும் கேளிர் என நேர்நெறியில்*
*பகுத்துண்டு பல்லுயிரோம்பிய*
*பண்டைப் பழமையைக் குலைப்பீரோ?*
*உலகெங்கும் நிகழ்ந்த*
*யுத்தங்களிலும் போர்களிலும்*
*சண்டைகளிலும் சச்சரவுகளிலும்*
*கலவரத்திலும் கொந்தளிப்பிலும்*
*குண்டடிபட்டு*
*மாண்டவரின்*
*சோதரர் நாமன்றோ?*

*2019*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநீதி

சர்வம் பணமயம் எனச்
சார்ந்து வாழும் நிலையில்
சமநீதி எங்குளது?
பணத்தைச் சுற்றிப் பந்தங்கள்
பணத்தால் மேவும் உணர்வுகள்
பணத்திற்காய் கூடும் கூட்டுகள்
பணத்தோடு உறவாட உறவுகள்
பணத்திற்காய் மாயஜாலங்கள்...

பணமே ஆளுமெனில்
நீதியென்ன நியாயமென்ன
நீதி மானும் பணம் எனில்
நீதி பிறழ்வரெனில்
நீதி மன்றேன் ஓதிடச் சட்டமேன்
ஒழுக்கமேன் பண்பு ஏன்?

விலைபோகும் விதத்தில்
பண்பிலாச் செயலில்
பாழ்படச் சிறுமியரை புணர்ந்த
பிம்பங்களை விற்றே
பிழைக்கின்ற கூட்டுகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதிவலையில் ஆட்சியர்
வன்புணர்ந்த கூட்டினை
காவலர் துணையொடு
காத்திட முனைந்திடினும்
எழுச்சியுற்ற மக்களின்
இன மத சாதி பேதம் கடந்த
ஒருமுக எதிர்ப்பினால்
நீதி நெறியென்று
சாவெனச் சாற்றித்
தண்டனை வகுத்தபோதும்
தண்டனை தாங்கா
உறவினர் உதவிட
மேல் முறையீடு செய்தே
நிற்கத் தகும் சட்டமெனில்
சாட்சியம் மாற்றி
சாட்சியம் அழித்து
சாட்சியம் போதாமையென
நாட்டிட முடியுமென
நவின்றிடுவரெனில்
சமநீதி நிலவிடும் எனநாமும்
சகத்தினில் நம்புவமோ?

ஒருகால்
கரம் பிடித்துக் கரம் பிடித்து
ஒருசேர ஒருமித்து
நிமிர்வமேல்
சமதர்மநெறிநின்று
ஆண்டைகளை அகற்றியே
சமநீதி நாட்டுவமோ?

*வளரி சித்திரை 2018*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாருமற்றவன் என்பதனால்

அடிபட்டுக் கிடக்கின்றான்
நோவுற்றுக் கிடக்கின்றான்
காயமுற்றுக் கிடக்கின்றான்
அடித்தவனுக்கே அணி சேர்கின்றது
அழுதவனுக்காய் கேட்டவனுக்கு
ஆறுதலாய்
சண்டித்தனம் கூடதாது தம்பி எனச்
சளாப்பிடும் வார்த்தையில்
சமாதானப் பேச்சில்
தலைவன் நின்றிட
மைதானம் மேலும் மலர்ந்திட
அடிபட்டவன் அவனது தம்பியில்லை
அவனது உறவில்லை
அவனது நண்பரின் உறவுமில்லை
அடிபட்டவனுக்கு தகப்பனில்லை
மாமன் இல்லை
அணிசேர யாருமில்லை
பிணைப்பில்லை அணைப்புமில்லை
ஏனென்று கேட்க ஆளில்லை
என்பதனால் அது பெரிதெனப்படவில்லை
அவன் தந்தையோ
உழைத்து உழைத்தே
உருக்குலைந்து
முற்றிய
உற்றறியா நோய்க்குப்
பலியாகிப்போனதால்
பெற்ற பிள்ளையும் இன்றோ
பேராற்றுக் கிடக்கின்றான்
அடித்தவன் மைதானத்துள்
மீண்டும் துளிர்க்க
அடிபட்டவன்
உற்ற கணவன் பிரிவில்
தேறாள் ஆகி நின்று
பெற்ற பிள்ளைகள் வளர்க்க
ஓடாய்ப் போன தாயின் மடியில்...

காற்றுவெளி புரட்டாதி 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேறோமோ?

இந்தக் கணம் எனக்கு இன்பமாயில்லை
நேற்றைய நினைப்புகளும் சிலிர்ப்பைத் தரவில்லை
நாளை பற்றிய எண்ணம் துணுக்குற வைக்கின்றது
மனிதரை மனிதர் நோதலிலேயே
வாழ் நாள் தேய்கின்றது
ஒருவரை ஒருவர்
இருவரையும் மற்றொருவர்
மூவரையும் நாலாமவர்
விழுங்கிட எனப் பொழுதொரு வண்ணமாய்
யாவரினதும் நகர்வுகளாய்
நாட்களின் கரைதல்கள்...

போகிறவர்க்கும் வருகிறவர்க்கும்
என் நினைப்பு ஏன் வரும்
அவர் பற்றிய புரிதலும்
தெரிதலும் என்னளவில்
இல்லையெனில்
பெய்வரோ அன்பினை!
அய்யம் கொள்ளும்
மனம் என்னளவில்
மட்டும் என
குற்றம் சாட்டிடிலும்
மீட்சியோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றியுள்ள சூழலில்
நிகழ்ந்த, நிகழும்
மாற்றம் என்பது
எனக்காயும் உனக்காயும்
எவர்க்காயும் அன்றி
என்னையும் உன்னையும்
மூன்றாமவரையும் நாலாமவரையும்
ஒருசேர ஆட்டுவிக்கும்
ஓரிருவர்க்காய்
ஆனதெனில்
எனைப் போலும்
உனைப் போலும்
உலவிடும் யார்க்குமாய்
உலகோர் அனைவர்க்குமாய்
மாற்றங்களையே
மாற்றிடும் முனைவில்
நாம்
தேறோமோ?

*காற்றுவெளி சித்திரை, 2019*

பொதுசன நூலகம்
10 JUN 2020
மாநகர சபை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையவர் தேடலில் இயலுவது எதுவோ?

நீள் புவியெங்கும்
நித்தம் புதுப்புதுக் கோலங்கள்
ஆள் புலமெங்கும்
அதிகாரத்தின் கோரங்கள்
பாழ் பட்டதோ எனப்
பழமையின் கோபங்கள்
இளையோர் மனங்களோ
இணையவழி அலசல்கள் !

தொழில் முனைவிற்கே
கல்வியென காட்டிடும்
போட்டியில் சிதைந்து
எட்டிக்குப் போட்டியாய்
நாட்டிடத் துடிக்கும்
துடிப்பினில் இளையோர்
கால விரயமாய்
சூழல் சிதைந்திட
இயற்கை குலைந்திட
மனப் பிறழ்வுகளாய்
தனிமைச் சிறைகளாய்
பூமியின் குளுமையின்
குதூகலம் இழந்தவர்களாய்...

10 JUL 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைய உலகின் போக்கில்
பண்பும் விழுமியமும்
காப்பது கனவோ?
இளையவர் தேடலில்
இயலுவது எதுவோ?
முன்னுணர்ந்த வள்ளுவ
நெறியில் நின்றே
வாழ்வரோ வையகத்தில்
வழிவழி வந்த மாண்புகள்
தெளிவுறக் கொள்வரோ?
காட்டாரோ நாளைய சந்ததிக்கு
சித்தரை புத்தரை ஆய்ந்து
தேட்டமும் தேற்றமும்!

காற்றுவெளி மாசி 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகை ஆளும் பரம்பரையொடு...

அழுது அழுது நினைவைச் சுமந்து
அரற்றும் எமக்கு
அனைத்தும் இயலுமோ
அன்று எங்கள் தேசத்து மாந்தரைக்
கொன்று குவித்த போதில்
ஒன்றும் செய்வதற்கு முடியாது
முனகிய பொழுதுகள் மறப்பமோ?
ஏன் பிறந்தோம் என ஏங்கிய நாட்கள்
ஏன் இந்நிலையில் தாழ்ந்தோம்
எனத் தவித்த நாட்கள்
ஒரு பொழுது நினைத்தோமோ
தெரு வெங்கும் மனிதர்
உயிர் காக்க
ஓடஓட விரட்டவும்
சுடவும் குண்டுமாரி பொழியவும்
ஓங்கிய குரல்கள்
ஓவென கத்தும் கணங்கள்
யாரேனும் நினைத்தோமோ
பாவப்பட்ட மக்களா அவர்கள்
பஞ்சப்பட்ட மக்களோ அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டபரம்பரை மீண்டுமொரு முறை
ஆள நினைத்ததனால்
மாண்ட
ஆளப்படுவோர் அனாதரவாய்
அண்ட வெளி எங்கும்
துண்டமாய் கிடக்க...
ஆண்டபரம்பரை
மீண்டும் எழுகிறது
மீள மீள
ஆளப்படுவோர்
ஈய்கின்ற
ஓட்டுக்கள் மூலம்
ஒட்டுமொத்த மக்கள் சக்தியை
உலகுக்கு காட்டி
உலகை ஆளும் பரம்பரையுடன்
கலந்து தாமே மேன்மையுற
ஆளப்படுவோராய்
நாமோ
மேலும் மேலும்
அடிமை மிடிமை நிலையில்
மீளாது இருத்தற்கே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்படி?

தப்புகள் மிகுந்திங்கு
இப்படி நிகழ்கின்றன எனில்
எப்படி? எப்படி..?
ஆணியம் பெண்ணை இழிவுபடுத்த
வேணியம் கொண்டு இருப்பதெனில்
எப்படி? எப்படி...?
சினிமா, சித்திரம், பத்திரிகை
இணையம் எனத் தொடர்ந்து
பெண்ணை
அரை நிர்வாணமாக்கி
திரை ஓவியமாக்கி
சந்தைப்படுத்தலே குறியாகி
இரசனைக்காய் காட்டுவரெனில்
ஆண்கள் பெண்நிலை புரிந்து
எண்ணத்தில் கொள்வரோ...

இணையெனக் கொள்ளக்
கருதிடல் அன்றி
வேட்கையில் வெதுப்பில்
வேட்டையே ஆடிடும்
போக்குகள் பொசுங்கிடா
இன்றெம்
இளையவர் போக்கு பிழையெனில்
இத்தவறுகள் நிகழும் வண்ணம்
இவர்கள் நினைப்பினை இனியும்
வழிவழியாய் வந்த
ஆண்வழிப்
பெண்நிலைச்சித்தரிப்பே
வழிப்படுத்திடுமோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் இயங்கிடில்

*தமிழ் என்றோர் மொழி தனியே*
*மாந்த மொழி என எண்ணிடேன்*
*தமிழ் உயர்வென்றோதியே வாழ்ந்திடில்*
*மாந்தர் உயர்ந்திடுவர் எனக்கருதேன்*
*மாண்பும் செம்மையும் தொன்மையுமுடைய*
*தமிழ் என் தாய்மொழி எனக்கென்பதற்காய்*
*மாற்றுமொழி பேசுவோர் என் சோதரர்*
*எனக் கொண்டாட நான் மறுக்கிலேன்*
*தமிழ் இதயத் திருந்து எழும் மாந்தரை*
*தமிழரிலை என்று செப்புவாரைத் தூற்றி*
*தமிழ் உலகினில் எங்கும் வாழ்*
*சாதாரணர் மொழியெனும் மகிழ்வில்*
*பூரித்திடுகின்ற என் இதயம் தமிழ்*
*அந்தச் சாதாரணரின் மொழி எனக் கூவிட*
*எங்கும் எதிலும் என்றும் எப்பொழுதும்*
*தமிழ் இயங்கிடில் தரணியில் செறிவதுவே!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழைப்பவர் தலைமையில்

ஏனந்த நாட்கள் மீண்டும் வருகின்றன
வானத்தில் கூக்குரல்கள் மீண்டும் ஒலிக்கின்றன
கானகத்தில் ஒப்பாரிகள் மீண்டும் கேட்கின்றன!

கொத்துக்கொத்தாய் தமிழர் அழிந்திடப்
பொத்தம்பொதுவாய் மனிதம் அழிந்தது
சாத்தியமாகா தனிநாடென சரித்திரம் எழுதியது!

விடுதலைக்கான மார்க்கம் இழந்துநிற்க
சடுதியில் நிகழ்ந்தன சதிவலைத் திட்டங்கள்
கொடுமைகள் செய்தோர் மாய்ந்தனரில்லை!

கொடுமைகள் அரங்கேறத் திட்டமிட்டாரையே
விடுதலைக்கு துணைகேட்கும் நிலையாச்சு
கேடுசெய்தாரை அண்டிவாழக் காலமாச்சோ!

இனிஎமக்கு இயலுவன எதுவெனத் தேர்வமோ
தனித்தியங்கி தரித்திரம் போக்குவதுவோ
சனிமாற்றம் வருமெனத் தான் காப்பதுவோ!

மாற்று எதுவென நாம் நினைந்திடில்
ஆற்றுதல் ஒன்றே வழியெனக் காண்பம்
வேற்றுமை வேரறுத்து மானுடம் ஓர்தலே!

ஒடுக்கப்பட்டவர் தேசங்கள் தரணியில் எழுந்திட
ஒடுங்கிய உழைப்பவர் தலைமையில் ஓங்கியே
விடுதலையில் உலகெங்கும் சமத்துவம் ஆக்குவமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடை கிடையா வினாக்களோடு

மனம் இறுகிய கணங்களில்
மலருமோ எங்கள் இதயம்?
மடிந்தவர் முகங்கள் எங்கள்
மனவெளி எங்கணும்
வீழ்ந்தவர் நினைவினைச்
சுமந்திடும் கணங்கள்
ரணங்களாய் நினைவுகள்
நிகழ்ந்தன எல்லாம் நிதமும்
நினைவுகளாய் வதைக்கும் நிமிடங்கள்
நிம்மதி குலைக்கும் கேள்விகள்
இனி... இழப்பதற்கு எமக்கு
இருப்பது எதுவோ?
கனிந்திடுமோ எனும் கனவினில்
எமக்குள் ஏன் கூவல்கள்...
அடுத்துக் கெடுத்தவர்
பக்கம் பாப்பர் என்றும்
தொடுத்து போருக்குத்
துணைநின்றவர்
துயர் தீர்ப்பரென்றோ
தொலை தூரத் தேடல்கள்...
விரிந்து கிடக்கும்
பூமிப் பந்தில்
விடை கிடையா வினாக்களோடு
நடையினைத் தொடர்ந்திடும்
நடைப் பிணங்களாய் நாங்கள்...
மானுடம் தளைக்கும் பாதையில்
ஏனுடன்பட இன்னும் தயக்கம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிற்க அதற்குத் தக

தரணியெங்கும் தமிழரென
பொங்கி மகிழ்ந்து முகநூல் பரப்பி
வாழ்த்துக்கள் பல பெற்று நான்
இங்கும் வந்து உழவர் விழவில்
மகிழ்ந்துள்ள தலைமைக் கவிஞர்
கவிப்பொங்கல் படைக்கவந்த கவிஞர்
கவிச்சுவை பருக வந்த சுவைஞர்
அனைவர்க்கும் என் அகம் மகிழ்ந்து
வணங்கி நின்று வியக்கின்றேன்
நானும் ஒரு கவிஞன் என்று
வெறுமனே இரசித்துவிட்டுப் போகின்ற
என்னையும் அழைத்திருக்கின்றனர்
தேசிய கலை இலக்கிப் பேரவையினர்
தோழமையோடு கூடி
நாற்சார் வீட்டுக்குள் சாற்றுக கவியென்று!
எப்படிச் சாற்றுகவெனில்
நிற்க அதற்குத் தகவாம்!

சொற்சுவை பொருட் சுவை கூட்டி
நற்றமிழ் கொண்டு பாட நானென்ன வரகவியா?
இப்படித்தான் இருபத்திரண்டு வயதினில்
இயலுமானால் ஒரு கவிசாற்று என்று
சென்னை மாநிலக்கல்லூரியில் நண்பர் செப்பினர்
கற்பெனப்படுவது என பிரத்தியேக தலைப்புக்கொடுத்து
சொற்சுவை கூட்டி நானும் கூடிய நண்பரிடை
பூங்காக் கவியரங்கென சந்தானம் பெயரிட
முற்றத்தில் எழுந்து நிற்கின்றேன் கவிபாட
சிற்றிதழில் கிறுக்கிய என் வரிகளுடன்
அடியெடுத்து அரங்கில் வீச முயன்றிடிலோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுங்கின கால்கள்! சொற்கள் திக்கின!!
விடுப்பு பார்த்தவரோ விசுக்கென்று சிரித்தனர்..
வியர்த்துக் கொட்டியது எனக்கு
காலில் என்ன நடுக்கமென காவேரி கேட்டாள்
கருத்தொருமித்து பாடு என ஆணையிட்டாள்
ஒருவாறு நானும் செப்பிவிட்டேன்
கிறுக்கிய அத்தனை வரிகளும் ஒப்பிவிட்டேன்
கிறுக்குத்தனமாய் எழுதியதன்று எதுவென்று அறியேன்
கற்பு எனப்படுவது என்னவென்று இன்றுவரை புரியேன்
நிற்க அதற்கு தகவென இன்றெனக்கு ஏனிந்த தலைப்பு?
கட்சி இரண்டுக்கும் பொதுவில் வைப்பமென்று
கருதியதால் நானும் காத்திட்டேன் கற்பெனிலும்
சொற்திறம்பாமை என நற்பொருள் உள்ளதென
சாற்றிடுவார் ஔவையார் எனும் மூதாட்டி
சரி விடுவம் வம்புக்கு ஏன் போவம்
முகநூல் ஒரு செய்தி தருகின்றது
அகத்தில் உமக்கு கற்புண்டோ எனும் கேள்விக்கு
இல்லை எனத் துணிந்தே நங்கையர் நவில்வர் ...
கால மாற்றம் இது அவரவர் சுதந்திரம் என
கருதிடத் தோன்றும் எனக்கேன் இன்று
நிற்க அதற்குத் தகவென ஏனிந்த தலைப்பு?

அப்படியே இரு எனும் தலைப்பில் புத்தகம்
அப்படியே இரு என்றால் இயங்கியலுக்கு எதிர்
என கருணாகரன் முகம் சுழிக்க
அது தரும் பொருள் எதிர்நிலையில் போராடு
என்பதாக தணிகையர் சொல்ல
ஆச்சுது புத்தகம் வந்து விமர்சனமும் வந்தாச்சு
இப்போதோ காண்பவர் எல்லாரும்
அப்படியே இருக்கிறார் இவர் தன் புத்தக தலைப்புப் போல
எனச் சொல்லிச்சொல்லியே எனை
அப்படியே இரு என விட்டனர் எனில் இன்று
நிற்க அதற்குத் தகவென ஏனிந்த தலைப்பு?
தப்புத் தப்பாய் போகின்றார் இளையோர்
எப்பவும் கைத்தொலைபேசியில் இணைப்பு
விரட்டியும் மிரட்டியும் அரட்டியும் நங்கையரை
பணிய வைப்பதில் எங்கும் பரபரப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர் இதயத்தில் என்றும் படபடப்பு
விடுப்பு பேசுபவர்க்கு எடுப்பு இதுவெனக் கிடக்க
எங்கும் எங்கும் எங்கும் பாப நாசம்
பற்றைகள் எங்கும் செற்றைகள் எங்கும்
பதறப் பதறத் தேடித்திரியும் பெற்றோர்
ஒதுங்கிப் போகும் எனக்கு ஏனின்று
நிற்க அதற்குத் தக எனுமிந்த தலைப்பு
முப்பது ஆண்டுகள் மூண்ட பகைமையில்
துப்பாக்கி தூக்கி போராடி ஆகுமெண்டு
அப்படியே மக்களை இருக்க விட்டு
கொப்பரிலை ஏறி ஏகம் நாமே என்று
செப்படி வித்தைகள் பலவும் காட்டி
குழந்தை பிடி படலமாய் மாறி
செத்தே போனரே எனக்கொண்ட போதும்
ஒப்பிட மறுத்திடும் போக்குகள் பாத்து
செப்பிட எனக்கென்ன உண்டென ஓரமாய்
சென்றிட எனநான் ஓய்ந்து போயிருக்க
நிற்க அதற்குத் தக என ஏன் தலைப்பு?

சாதியம் தகர்த்திட என்றெழுந்து
வெகுஜனப் புரட்சியாய் பரிணமித்து
மாற்றத்தில் மக்கள் தலை நிமிர்ந்து
ஆற்றலை கூட்டியோர் ஏற்றம் பெற்றிடுகையில்
வீச்சுப் பெறுகிறோம் என எழுந்திடாது
சாதியம் ஓர் தேசியம் எனக் கோல்கொண்டெழுதி
சாற்றும் போதுதான் என்னத்தை செய்யவென
சாலையில் நின்று பார்த்துச் செல்லும் எனக்கு
நிற்க அதற்கு தக என ஏன் இந்த தலைப்பு?
ஒன்றே குலம் ஒருவனே தேவன் என
நன்று கற்றுத் தேர்ந்து அறிந்து
தெய்வம் தொழுவோர் உயர்ந்தோர் என ஏற்றி
மதச்சார்பின்மை மகத்தானதென உணர்ந்து
மத ஆராதனை மன்றத்தில் ஏற்றிட
மனம் ஒப்பி ஆற்றி விட்டிட
மதங்கொண்டு வந்தே விரட்டிடுவர் எனில்
வேண்டாம் எனக்கேன் வீண்வம்பென கிடக்கும்
எனக்கேன் நிற்க அதற்கு தக எனும் தலைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவனுக்கு விசர் பாரதிக்கு விசர்
படித்தவனுக்கு விசர் இந்தப் பகீரதனுக்கும் விசரெனை
ஆக்கவோ நிற்க அதற்கு தக எனும் தலைப்பு?

ஏன் என்னை உசுப்பிறீங்கள்
தக, தக, தக என்றால் எதற்கு தக?
காகிதப் புலிகள் எனக் கிடக்கும்
அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கே
விசுவாசம் காக்கும் தமிழ்த்தேசியம்...
பொதுமை எனும் முயல்வில்
வர்க்கம் என அணிதிரண்டு நின்று
பொங்கிடாவண்ணம் காக்க
சாதியம், பெண்ணியம், இனத்துவம், மதத்துவம்...
எதற்கு தக.. தக? எதற்குத் தக.. தக?

மாற்றம் ஒன்றே மாறாத விதியென
மார்க்சியம் தந்த பாதையில் எழுவீர்!
ஆற்றல் மிக்க கரங்களை இணைப்பீர்!
ஆக்குவீர் பொதுமைநெறி
பொங்குவீர் உலகெங்கும்
புதிய உலக ஒழுங்கு சமத்துவம் என
வறுமை வெறுமை எங்குமிலையென
அறுதியாக்குவீர் பொதுமை எங்கும்
ஆக்கியபின்
நிற்க அதற்குத் தக!

*தேசிய கலை இலக்கியப் பேரவை பொங்கல் கவியரங்கு 2017*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்வதேன்?

*புத்தர்*
*பரிநிர்வாணர் தாம்*
*புத்தம் சரணம் கச்சாமி*
*எத்தகைய மாந்தர்க்கும்*
*தத்துவமாய் கொள்ள*
*இயலும் தான்*
*துக்க நிவர்த்தி*
*ஆசை அறுப்பது*
*ஏற்புடையதே எல்லோர்க்கும்*
*தம்மபதம் தரும்*
*அறநெறி அனைவர்க்குமாம்*
*முன்னைத் தமிழர்*
*அந்நன்நெறியில்*
*நைனை மாதகல் சம்பில்*
*கந்தரோடை எனக்*
*கண்ட பௌத்தம்*
*அன்பே இன்ப ஊற்றென*
*ஆசிய ஜோதியாய்*
*எழுந்ததெனில்*
*இந்த நாடு*
*பௌத்த நாடு என*
*இலங்குவதெனில்*
*வாளேந்திய சிங்கம்*
*கொண்ட நாடென*
*வல்லரசுக்கெல்லாம்*
*வாய்ப்பாய்*
*கொல்நெறியை*
*கொள்வதேன்?*

*2019*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பம் துய்க்க...

படிப்பதற்கு வாய்ப்பாய்
துறையொன்று இருந்து
போதுமாய்
வருமானமிருந்தும்
மருத்துவராய் இயலவில்லையென,
மாபிள் பதித்திட்ட தரையொடு
இருப்பதற்கு சிறுவீடிருக்க
மாடி வீடிலையென,
போதுமாய் மாற்றுடையிருக்க
திருவிழாவில் நாளுக்கொரு
வண்ணம் காட்ட
பட்டுப் புடவை இலையென,
தாலிகோர்க்க கொடியிருக்க
தங்கம் அதிகம் ஜொலிக்கவிலையென,
பார்க்கப் பழைய தொலைக்
காட்சிப் பெட்டியிருக்கத்
தட்டை நெட்டையாய் கலக்கலாய்
காட்சிப் பிம்பம் பார்க்கவியலாதென,
ஆளுக்கொரு உந்துருளியிருக்க
மெத்தென இருக்க மகிழுந்து இலையென
இயலாத ஒன்றுக்காய் ஏங்கியே
இருக்கின்ற இன்பத்தில் இலயிக்கா
மனமெனும் குரங்கை எழுப்ப
நுகர்வு எனும் நுகத்தடியொடு
முதலாளியம் மேலும் மேலும்
மூர்க்கமாய் தாக்கும்!
மீள மீள கடன் பொறிக்குள்...
கடன் தீர்க்க பின்னும்
உழைப்பே மூச்சாய்
மன உளைச்சலொடு...
நம் சக்தியெலாம்
வட்டி குட்டியென
தட்டிப் பறிக்க
இன்பம் துய்க்க
இயலுமோ எம்மால்!

காற்றுவெளி சித்திரை 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாவர்க்கும்

*கோடானு கோடிபேர்*
*இறைமையையே*
*தாமளிக்க*
*சூட்சியில் தேர்ந்து*
*பண பலம் கொண்டு*
*ஆட்சிக் கட்டிலேறி*
*வலிமை பெறு அரசமைத்து*
*தாமுயர்ந்து*
*ஓரிருவர் சந்ததியே*
*நிலமளந்து ஆண்டனுபவித்து*
*உழுதுண்டு வாழும் மாந்தரை*
*மிடிமை நிலைக்காளாக்கி*
*ஆழ்கின்ற உலகோ நீளும்?*

*தொழிலாளர் நலன் வேண்டி*
*தொய்வில்லா நெறியொன்றில்*
*தொழிலாளர் தலைமையுற*
*எழிற்சியுறு எம்மக்கள் எழுந்து*
*நிலைமாற்றும் கொள்கையில்*
*வளமெல்லாம்*
*பொதுமை ஆக்கிடவே*
*யாபேரும் யாவர்க்கும் துணையாக*
*ஒருவர் எல்லோருக்குமாய்*
*எல்லோரும் ஒருவருக்காய்*
*நல்நெறியில் கூடுவரேல்*
*செல்வமது சேருமே*
*மிடிமையில் வீழ்ந்தார்க்கும்!*



76834
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்கம் புரிந்திட...

*எனக்குள் நீயும்*
*உனக்குள் நானும்*
*என்னில் நீயும்*
*உன்னில் நானும்*
*என்னால் நீயும்*
*உன்னால் நானும்*
*என்னொடு நீயும்*
*உன்னொடு நானும்*
*யாதொரு வேறுபாடின்றி*
*யாவரும் கேளிரெனக்*
*கலந்திடத் துடிப்பெனில்*
*விலத்திட ஏனெமக்குள்*
*சாதியம் இனத்துவம் மதம்...*
*இல்லாப் பிரிவினைகள்*
*எதற்கெமக்குள்?*
*பொல்லாங்கு செய்திடுவார்*
*பொசுங்கா திருக்கவென*
*சட்டங்கள் காவலிருக்க*
*எட்டியும் போட்டியும்*
*திட்டமிட்டே எமக்குள்ளே*
*விதைத்ததும் எவரோ!*
*விளக்கம் புரிந்திடில்*
*விலக்குவோம் பிரிவினைகள்..*
*விலத்திடா நாம்*
*கலந்திடப் பூத்திடும் மனிதம்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையன் என...

*தமிழர்*
*தேசிய இனமெனத்*
*தம்மை உணர்ந்து*
*நிலைநிறுத்த*
*சுயநிர்ணயம் இருக்குமெனில்*
*முஸ்லிம் இனம்*
*தேசிய இனமென*
*யாவரும் ஏற்றிடக்*
*காலம் கனியுமெனில்*
*மலையகத் தமிழர்*
*இனமென ஏற்றிட,*
*இந்நாட்டின் முதுகெலும்பாய்*
*சம ஊதியம் பெறும்*
*காலம் அமைந்திடக்*
*கூடுமெனில்*
*சிங்கள மக்கள்*
*மனங்களைச்*
*சிறுமைப் படுத்த*
*இனவாதம் கக்குபவர்*
*தேரர் ஆயினும்*
*ஓராத அரசொன்றை*
*மதச்சார்பற்றுத்*
*தேர்வர் எனில்*
*கூட்டாட்சில்*
*சிங்களர் தமிழர்*
*முஸ்லிம் மலையகத் தமிழர்*
*சுயநிர்ணயம் ஏற்றிட*
*இலங்கைத் தீவினை*
*ஒன்றியம் என*
*மாற்றிடில்*
*நானும் எழுவேன்*
*இலங்கையன் என!*
*2019*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆள்மாற்றக் கோருகிறது

தாமே
தமிழ்த் தேசியம்
என மொழியும்
வெள்ளாளியம்
ஆள்மாற்றக் கோருகிறது.

உலகெங்கும் சென்று
தமது நலன் காக்கத்
தமிழ்த் தேசியம் கக்கும்
சைவ வெள்ளாளியம்
கோயிலில்
உள்சென்று வழிபட
தேர் வடம் பிடிக்க
சாமி காவத் தோள்கொடுக்க
பஞ்சமர்க்கு மறுக்கின்றது.

தாழ்த்தப்பட்டோரைச்
சமநிலையில் பேணுதற்குக்
கிறித்தவ வெள்ளாளியம்
தனித் தேவாலயமென
முன்மொழிகின்றது.

உழைப்பவர்க்குச்
சத்துணவான
மாட்டுக்கறி
மறுக்கும்
இந்துத்துவ வெறியாய்
வெள்ளாளியம் மேல்கிளம்புகிறது.

உழைக்கும் மக்கள்
தாமெழ வேண்டாமென
ஈய்கின்ற விருத்தியில்
சுருட்டியது போகப்
பெறுவீர் எனப்
பேரங்கள் பேசிடும்
தேசியக் கட்சிகளொடு
ஐக்கியமான வெள்ளாளியம்.

முற்போக்குத்
தமிழ்த் தேசியம் நோக்கி
மாற்று அரசியலை
மக்கள் வேண்டிநிற்க
வெள்ளாளியமோ
ஆண்டபரம்பரையில்
ஆள்மாற்றக் கோருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றுலகு யார்க்கும்!

அவரவர் இனத்தில்
அவரவர் சாதியில்
அவரவர் மதத்தில்
பிறந்ததுவே சிறப்பெனப்
பிறந்த நாளினை மெச்சி,
அவரவர் இனத்தில்
அவரவர் சாதியில்
அவரவர மதத்தில்
மணம் முடித்ததுவே
மாண்பென
மணநாளைக் கொண்டாடித்
தந்தைக்கும் தாய்க்கும்
நாட்கள் என்றும்
மங்கையர் ஆடவர்
காதலர் என
நாள்களை வகுத்து
குழந்தை முதியர்
எனக் கொண்டாடத்
தினங்கள் இருக்கக்
கூடி மகிழும் யாரும்
மாந்தர் உரித்தை
வேந்தர் எனத்திகழ்
ஆள்பவர் கூட்டொன்று
சுரண்டியே உயர்வரெனும்
புரிதலில் சேர்தலில்லை
மேதினத்தில் அறைகூவல்
விடுப்பதில் தேர்வதில்லை!

பிறப்பில் இனமாய்
பிறப்பில் சாதியாய்
பிறப்பில் மதமாய்
பிரிக்கின்ற போதில்
விரிக்கின்ற வலைகள்
தெரிவதில்லை யார்க்கும்
வெகுஜனமாய்த் திரளா
நயந்த நாளொன்றில்
வியந்து யாரும்
திறனை வெளிப்படுத்தில்
மெச்சிடச் செல்வர்
கலக்கார் திறன்காட்டி!

திதி தேடி
ஆடி அமாவாசை நாடி
சித்திரைப் பூரணையில் பூத்து
தன்தன் தந்தை தாயரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையில் வைப்பதன்றி
மூத்தோரை நினைவுகூர்வதில்
ஆர்வமில் தன்மையில்
பிறந்த நாள் அழைப்பிற்கு
முகம் காட்ட
திருமண விழாவிற்கு
அறுகரிசி போட்டிட
சாமத்தியச் சடங்கில்
ஆலத்தி எடுத்திட
உடுத்துப் படுத்து
எடுப்பாய்ச் செல்வர்
தடபுடல் நடைமுறையில்
மனமொன்றிப் போவர்
ஏற்றத் தாழ்வுகளை
உற்றறிந்து உணரார்!

ஊர் ஒன்றுபட
நேர் நிற்கார்
ஊதிச் சண்டையில்
மோதிடப் பார்ப்பர்
ஆதி முறைமைகளென
ஓதி நிற்பர்
வேதியர் மேன்மையில்
இவர்
கூனிக் குறுகுவர்
ஏன் எதற்கெனக்
காரணம் அறியாத்
தோரணம் காட்டுவர்
வாவென்றால் வருவார்
தாவென்றால் தருவார்
சீர்தூக்கிப் பாரார்...

பார்ப்பரேல்
பிரபஞ்ச இயக்கத்தில்
சிறுபுள்ளி நாமெனத்
திரள்வில் வலிமையுற
இன்று இருப்பது
நாளை இலவாகி
சென்றன திரும்பா
சேதியை உணர்வர்
பகுத்தறியும் பாங்கில்
தேர்ந்து நின்று
நன்றுலகு யார்க்கும்
பொதுவெனச் சேர்வர்.

வளரி ஆடி 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டைகளின் அடிமைகளாய்

தோன்றில் புகழோடு தோன்றுக
என்றோதிய வள்ளுவன் வழி
தோன்றிய பாரதி பாரதில்
தோன்றிய புரட்சியை வியந்தே
ஆகா எழுந்தது பார் யுகப்புரட்சி
என்றே
அடிமை நிலையில்
மிடிமை கொடுமையில் சிக்கிய
மாந்தரின் விடிவிற்காய் பாடியும்
மாந்தர் நாம் உணர்ந்தமோ
தெரிந்தமோ தேர்ந்தமோ...
மாகவி எனப் புகழ்ந்தோமே
மாபுரட்சிக்கு வித்தாகினோமோ?

நேர்ந்தவை நிலைத்திடா
நிலையினில்
ஆண்டனர் மீண்டும்
சுரண்டிட கண்டனர் பாதை
மிடிமை நிலையில் தோய்ந்தவர்
அறியாமையை உரமாக்கிப்
பரம்பரையினரே பயனனுபவிக்க
பேந்த விழித்திடும் நாமோ..
இய பேசிக்குள் இயலுமாகின்ற
இளமைகள் கரையும் நாட்கள்
தயவை நாடும் மனங்களைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்த்திட வலை அமைப்பு
சேய்மையில் கண்டவர் யாரும்
நட்பெனக் கொள்ளாக் காலம்
உட்பொதிந்து இயபேசிக்குள்
பொத்தானுக்குள் சினேகம் நாடத்
தூயவை என எதுவுமிலையென
காய்கின்ற மனதொடு இருப்பு!

சூழ்ச்சிக்குள் மாய்ந்த நிலையெனில்
வேவுபார்த்திட நம்மை நாமே
காட்டிக் கொடுத்திட கற்றோம் எனில்
மதிக்கின்ற வகையினில் யார்க்கும்
பொறுப்பில்லா நிலையிலென்ன விதைப்பு
சேதிகள் பொறுக்கிட நாட்கள்
சேதிகளாய் விரிந்திட கூடுமெனில்
சேதிகளாய் ஆவதில் தான் தவிப்பு
சேதியே சேதியை தேடிடத்
தேவைகள் சேதியை நோக்கியே!

யாரிடம் யாருக்காய்
யாரொடு யாராகி
யாரொடு யார் மோதி
யாருக்காய் தேசமென
யாருக்கும் ஓர் தேசமென
தேசமே விமோசனமென
தேசத்தை தேசம் மேவ
தேசியம் தேடி குறுந்தேசியம் பேசி
தேசங்கள் கடந்த தேசியம் காண
ஓர் நாடு இரு தேசமென
ஓர் மதத்திற்கே தேசமென மதமே ஆழுமென
ஒடுக்கப்பட்ட சாதிகளின் தேசியமென
விடுக்கப்படுகின்ற தாள்களில் எங்கும்
பாசம் நாசம் பண்பு நாசம்
உறவு நாசம் உயிர்மை நாசம்!

வேசம் கூடும் பொய்மை மேவும்
கோசம் மாய கொள்கை மாய
மீட்பர் வருவர் கேட்பர் குறைகள்
ஏந்திடும் கைகள் ஏதிலியாய் எங்கும்
மாய்ந்தவர் பெயரில் மாயக் கனவுகள்
உயிர்ப்பர் உயிரோடு இருப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரழியா உடம்பொடு நாளையும்
வேய்ந்தவர் வருவர் வேதனை தீர்த்திடவென
யார்க்கு யார் காவலர்
யார்க்கு யார் மீட்பர்!

நஞ்சு கலந்த தேசத்து நிலங்கள்
நஞ்சே கலந்த விஞ்சும் பொதிகள்
நஞ்சே விளையும் கலவையில் உணவுகள்
நஞ்சை உண்டே செத்தே போகிட
தந்திரம் வியாபாரமாய் வியாபாரம் தந்திரமாய்
தேசம் ஆண்டபரம்பரையின் ஆணைப்படி!

ஆண்டைகளின் அடிமைகள் மிடிமையில்
ஆண்டைகளின் அடிமைகள் அறியாமையில்
ஆண்டைகளின் அடிமைகள் இழப்புக்குள்
ஆண்டைகளின் அடிமைகள் இறப்புக்குள்
ஆண்ட பரம்பரையே ஆளுவரெனில் நாம்
தோண்டி அறிந்து மூத்தகுடி
தமிழ் குடியென அறைவதில்
பெருமிதம் கொண்டே மாய்வோம்
போக்கு மாற்றிச் சிந்தியாதிருந்திடில்!

மாறுவமோ
தோன்றுவமோ
தோள்களில் சுமப்பமோ
அடிமைகள் எழுந்து நின்று
மானிடர் தேசமென ஒளிர்ந்திட!
மீண்டுமோர் யுகப் புரட்சியில்
பாட்டாளி வர்க்க சர்வதேசியம்
எழுந்து நிமிர்ந்திட!

தாயகம் ஜூலை–செப்டம்பர் 2018

KOHA JPL
132080 CC
276834
பொதுசன நூலகம்
10 JUN 2020
மாநகர சபை
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலக்கியத்தின் மூலம் சமூக மாற்றத்தைக் காண
ழைகின்றவர்கள் மக்கள் இலக்கிய கர்த்தாக்கள் ஆவர்.
களின் பாடுகளை, வலிகளை, துன்ப துயரங்களை
டும் அவர்கள் பாடுவதில்லை. மாறாக,
ந்தத் துன்பங்களின் உள்ளீடாக மனிதர்களைப்
த்துள்ள தடைகளை இனங்காட்டி,
தெழுச்சி கொள்ள வைத்து, சமுதாய மாற்றத்துக்கும்,
ிய பண்பாட்டு உருவாக்கத்துக்கும் வித்திடுவதும்
வர்களின் பணியாக உள்ளது.
வர்கள் ஒட்டுமொத்த மானிட விடுதலை பற்றிய நோக்குடன்
லக்கியத்தை அணுகுபவர்களாவர். அத்தகைய இலக்கியகர்த்தாவே
ிஞர் அழ. பகீரதன். அவரது கவிதைகள் மானிட விடுதலையைக்
ிமையப்படுத்தியவை. மனிதர்களைச் சுற்றி நடைபெறும்
ியாயங்களைப் பேசுபவை. நுகர்வுக் கலாசாரத் தளைக்குள்
து மக்களின் வாழ்க்கை தொலைந்து கொண்டிருப்பதை வெளிச்சம்
ட்டுக் காட்டிச் சாடுபவை.
புவதோ' என்ற இந்தத் தொகுதியிலும் அழ. பகீரதனின் தாக்கம் மிக்க
தைகள் பலவுள்ளன.

ந்தரசிவம்
லவர், காலையடி மறுமலர்ச்சி மன்றம்
பக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்

ISBN978-955-38214-1-6

லையடி மறுமலர்ச்சி மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org